## Appendix I.

[*Vide* Answer to Starred Question No. 401 at page 415.]

The North-East Monsoon rains in 1965 were generally very helpful to the standing crops. The district-wise particulars of benefit got and damages suffered by the rains are furnished below :—

(1) *Chingleput.*—Due to failure of timely rains, standing crops in an extent of 40,432 acres under wet and 11,058 acres under dry in Chingleput district were about to turn shavi. But on account of the heavy rains in the early part of December 1965, the crops were saved and supply was received in the tanks. No damage was caused by the heavy rains.

(2) *South Arcot.*—The rains proved beneficial to the standing crops in this district which were about to perish. There was no damage to the standing crops on account of the rains.

(3) *Thanjavur.*—In this district, the first crop paddy was raised in an extent of 8,77,000 acres. Due to poor storage conditions in the Mettur Dam, the crops were about to wither but they were saved due to the rains in the last week of November and the first week of December 1965. The rainfall was heavy which resulted in several breaches in the rivers and tanks. An extent of about 44,000 acres of paddy was submerged. The loss incurred due to this rainfall was negligible compared to what would have occurred if there had been no rains at all, in which case the paddy crop on an extent of 8,77,000 acres would have withered.

(4) *Ramanathapuram.*—Due to the North-East Monsoon downpour in December 1965 the tanks in the eastern coastal area of this district got supply and consequently the yield was better. The extent of lands benefitted by the rains in the eastern coastal areas are furnished below talukwise :—

| | | ACS. |
|---|---|---|
| 1 | Tiruvadanai Taluk ... ... ... | 11,791 |
| 2 | Mudukulathur Taluk ... ... ... | 52,573 |
| 3 | Ramanathapuram Taluk ... ... ... | 40.855 |
| | Total ... | 1,05,219 |

No damage was caused to the standing crops by the rains.

(5) *Tirunelveli.*—During 1965, the North-East Monsoon rains commenced in the last week of October 1965 and continued during December 1965. They were fairly widespread and the two reservoirs in this district, namely the Manimuthar and Papanasam became full. The Pishanam agricultural operations under the Tambiraparani system were started by the end of October 1965 and the transplantation was completed by the end of December 1965. The tanks under the Tambiraparani system and Manimuthar Main Canal area received adequate supply. Cultivation was done in the entire available area both under the Tambiraparani

[7th November 1966

and Manimuthar systems. The supply position in the reservoirs was encouraging and the prospects of the crops coming to maturity improved. As regards the non-Tambiraparani areas, the tanks fed by Chittar, Ghatana, Pachayar, etc., and the rainfed tanks received fair supply. The condition of standing crops in the taluks of Kovilpatti, Srivaikuntam, Tiruchendur and Nanguneri which lie in the east coast was quite fair. In portions of Shencottah, Tenkasi and Sankarankoil taluks, however further rains were required for the successful maturity of the crops. Damages were caused to the standing crops in an extent of 177.94 acres in Puthantharuvai and Sasthavinallur villages in Sattankulam Sub-taluk in Tiruchendur taluk due to inundation of rain water in a tank. The loss in production was estimated at Rs. 1,88,300.

(6) *Kanyakumari district*.—The North-East Monsoon set in rather late but it served to fill both the reservoirs and most of the irrigation tanks in the district. The harvest and outturn were satisfactory. No damage was caused by the monsoon to the crops.

விளைந்து வந்த பயிர்களுக்கு 1965-ல் பெய்த வட கிழக்குப் பருவ மழை பொதுவாகப் பெரும் உதவியாயிருந்தது. இம் மழையினால் அடைந்த நன்மை, சேதம் இவற்றின் அளவுகளின் மாவட்டவாரி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) **செங்கற்பட்டு.**—செங்கற்பட்டு மாவட்டத்தில் உரிய காலத்தில் மழையின்மையால் 40,432 எக்கர் நன்செய் நிலத்திலும், 11,058 எக்கர் புன்செய் நிலத்திலும் விளைந்துவந்த பயிர்கள் சாவியாகப் போவதற்கிருந்தன. ஆனால் 1965 டிசம்பரின் முன் பகுதியில் பெய்த பெருமழையால் பயிர்கள் காப்பாற்றப்பட்டன. ஏரிகளிலும் நீர் பெருகியது. பெய்த பெரு மழையால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

(2) **தென் ஆற்க்காடு.**— இம் மாவட்டத்தில் நாசமடைவதற்கிருந்த விளை பயிர்களை இம் மழை காப்பாற்றியது. மழையால் விளை பயிர்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

(3) **தஞ்சாவூர்.**—இம் மாவட்டத்தில் 8,77,000 ஏக்கரில் முதல் போகம் நெல் பயிரிடப்பட்டது. மேட்டூர் அணையில் நீர் அதிகமில்லாததால் பயிர்கள் வாடும் நிலையை அடைந்தன. ஆனால் 1965 நவம்பர் இறுதி வாரத்திலும், டிசம்பர் முதல் வாரத்திலும் பெய்த மழையால் பயிர்கள் பிழைத்துக்கொண்டன. பெருமழை பெய்த காரணத்தால் பல ஆறுகளும், ஏரிகளும் உடைப்பு எடுத்துக்கொண்டன. 44,000 ஏக்கர் நிலத்தில் விளைந்திருந்த நெற்பயிர்கள் மூழ்கிவிட்டன. இம் மழை பெய்திராவிட்டால் 8,77,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் அழிந்துபோயிருக்கும். எனவே இம்மழை காரணமாக ஏற்பட்ட இழப்பைவிட நன்மையே அதிகம்.

(4) **இராமநாதபுரம்.**—1965 டிசம்பரில் வட கிழக்குப் பருவ மழை பெய்தது. இதன் காரணமாக இம் மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஏரிகள் நிரம்பின. எனவே இம்முறை விளைச்சல் முன்னிலும் நன்றாக இருந்தது. கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் இம் மழையினால் பலனடைந்த நிலங்களின் விவரம் தாலூகா வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | எக்கர். |
|---|---|---|
| 1 | திருவாடானை தாலூகா .. .. .. | 11,791 |
| 2 | முதுகுளத்தூர் தாலூகா .. .. .. | 52,573 |
| 3 | இராமநாதபுரம் தாலூகா .. .. | 40,855 |
| | மொத்தம் .. | 1,05,219 |

7th November 1966]

இம் மழையினால் விளை பயிர்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை

(5) **திருநெல்வேலி.**—1965-ம் ஆண்டில் அக்டோபர் இறுதி வாரத்தில் தொடங்கிய வடகிழக்குப் பருவ மழை 1965 டிசம்பரிலும் தொடர்ந்து பெய்தது. ஏறக்குறைய மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததனால் மணிமுத்தாறு, பாபநாசம் ஆகிய இரு நீர்த்தேக்கங்களிலும் நீர் நிறைந்தது. 1965-ம் ஆண்டு அக்டோபர் இறுதியில் தாம்பிரபரணித் திட்டத்தின்கீழ் பாசனம் வேளாண்மைப் பணிகள் தொடங்கப்பட்டன. 1965-ம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் நடவு வேலைகள் முடிவடைந்துவிட்டன. தாம்பிரபரணித் திட்டம், மணிமுத்தாறு முக்கிய கால்வாய்த் திட்டம் இவற்றின் கீழுள்ள ஏரி, குளங்கள் போதுமான நீரைப் பெற்றன. தாம்பிரபரணி, மணிமுத்தாறு திட்டங்களின் பயிர் விளைவிக்கக்கூடிய எல்லாப் பகுதிகளிலும் பயிர் விளைவிக்கப்பட்டது. நீர்த் தேக்கங்களில் போதுமான நீர் இருப்பில் இருந்தது. எனவே நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டது. தாம்பிரபரணித் திட்டத்தின்கீழ் வராத பகுதிகள் சித்தாறு, கடானு, பச்சையாறு இவற்றின் மூலம் நீர் பெறும் ஏரி, குளங்கள், மானம் பார்த்த ஏரிகள் இவைகளுக்கும் போதிய அளவு தண்ணீர் கிடைத்தது. கிழக்குக் கடற்கரையோரத்தில் உள்ள கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், நாங்குனேரி தாலுகாக்களில் உள்ள விளை பயிர்கள் நல்ல நிலைமையிலேயே இருந்தன. செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலுகாக்களின் சில இடங்களில் கதிர்கள் முற்ற மேற்கொண்டும் மழை தேவைப்பட்டது. திருச்செந்தூர் தாலுகாவைச் சேர்ந்த சாத்தான்குளம் துணை தாலுகாவிலுள்ள புத்தன்தருவை, சாஸ்தாவினல்லூர் முதலிய கிராமங்களில் 177·94 ஏக்கரில் விளைந்து வந்த பயிர்கள் மழை காரணமாக ஏரியில் உடைப்பு ஏற்பட்டதால் சேதமடைந்தன. உற்பத்தி இழப்பு 1,88,300 ரூபாய் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(6) **கன்னியாகுமரி மாவட்டம்.**—இம் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை காலங்கடந்து பெய்தது. ஆயினும் இம் மாவட்டத்தில் உள்ள இரு நீர்த்தேக்கங்கள், பல பாசன ஏரி, குளங்கள் இம் மழையினால் நீர் பெற்றன. விளைச்சலும் கண்டு முதலும் திருப்திகரமாக இருந்தன. இப் பருவ மழையால் பயிர்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 402 at page 415]

The taluks in the State which were seriously affected by drought conditions in Fasli 1375 are as follows:—

**Dharmapuri district—**

(1) Hosur taluk.

(2) Veppanapalli Panchayat Union Area in Krishnagiri taluk.

**The Nilgiris district—**

(1) Ootacamund taluk.

(2) Coonoor taluk.

**Thanjavur district—**

All the taluks.

**Ramanathapuram district—**

(1) Srivilliputhur taluk.

(2) Rajapalayam sub-taluk.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS